பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

04 07 2024 | 6 45 | செய்தி ஆசிரியர்
வியாழக்கிழமை | காலை | ஜெ. காமராஜ்

வணக்கம் - மாநில செய்திகள் -
வாசிப்பவர் - ரங்கநாதன்

தலைப்புச் செய்திகள்

1. நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் 90 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
2. தமிழகத்தில் அரசு தனியார் கூட்டு முயற்சியில் 20 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் சுற்றுலாத் தலங்கள் மேம்படுத்தப்பட உள்ளதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராமச்சந்திரன் கூறியுள்ளார்.
3. ஜிகா வைரஸ் பாதிப்ப தமிழகத்தில் இல்லை என்றும், இது குறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் மாநில அரசு தெரிவித்துள்ளது.
4. தமிழகத்தில் ஒரு சில இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
5. டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் உலகக்கோப்பையை வென்ற இந்திய அணி இன்று அதிகாலை புதுதில்லி திரும்பியது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

[]<<<>>>[]

நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் 90 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2015-ம் ஆண்டு தொடங்கப்பட்டு 100 நகரங்களில் செயல்படுத்தப்படும் இந்த திட்டத்தில் இதுவரை ஒரு லட்சத்து 44 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் ஏழாயிரத்து 188 பணிகள் முடிவடைந்துள்ளதாக நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மீதமுள்ள 10 சதவீத பணிகளை முடிக்க மேலும் கால அவகாசம் வழங்குமாறு சில மாநில அரசுகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடம் இருந்து கோரிக்கைகள் வந்ததாகவும் அதை ஏற்று இந்த திட்டத்தின் செயல்பாட்டுக் காலம் அடுத்த ஆண்டு மார்ச் 31-ம் தேதி வரை நீட்டிக்கப்படுவதாகவும் அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

19 ஆயிரத்து 926 கோடி ரூபாய் மதிப்பிலான இந்த திட்டத்தின் மீதமுள்ள பணிகள் அதற்குள் நிறைவடையும் என அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

[]<<<>>>[]

தமிழகத்தில் அரசு தனியார் கூட்டு முயற்சியில் 20 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் சுற்றுலாத் தலங்கள் மேம்படுத்தப்பட உள்ளதாக மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நீலகிரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

*( சவுண்ட்பைட் - ராமச்சந்திரன் ) -35---- செகண்ட்*

[]<<<>>>[]

தமிழகத்தில் போதைப்பொருள் விற்பனையை தடுக்க தேவையான நடவடிக்கைகளை மாநில அரசு எடுக்க வேண்டுமென அஇஅதிமுக பொதுச்செயலளார் திரு எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் போதைப்பொருட்கள் விற்பனை மற்றும் அது தொடர்பான வன்முறைகள் அதிகரித்து வருவதாக கூறியுள்ளார்.

இதுபோன்ற சம்பவங்களில் அரசியல் குறுக்கீடின்றி கடும் நடவடிக்கை எடுக்க காவல்துறைக்கு முழு சுதந்திரம் அளிக்க வேண்டும் திரு எடப்பாடி பழனிசாமி மாநில அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

நீட் தேர்வால் அரசு பள்ளி மாணவர்கள் அதிக அளவில் பயனடைந்துள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், மாநில அரசு அமைத்த ஏ கே ராஜன் தலைமையிலான குழுவின் அறிக்கையில் உள்ள குறைபாடுகளை பிஜேபி சுட்டிக்காட்டி இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

முழுமையான விவரங்கள் இல்லாத அறிக்கையை வைத்துக் கொண்டு திமுக அரசு நீட் எதிர்ப்பை தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக திரு அண்ணாமலை குற்றம்சாட்டியுள்ளார்.

[]<<<>>>[]

தூய்மை பணியாளர்கள் எளிதில் அணுகும் வகையில் தேசிய தூய்மைப் பணியாளர் ஆணையம் செயல்பட்டு வருவதாக அதன் தலைவர் திரு மா வெங்கடேசன் கூறியுள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்று பேசிய அவர், தூய்மை பணியாளர்களுக்கு மூன்ற மாதங்களுக்கு ஒருமுறை மருத்துவ முகாம்கள் நடத்தப்பட வேவண்டுமென்று தெரிவித்தார்.

மத்திய அரசு வழங்கும் காப்பீட்டு திட்டங்களில் அவர்கள் இணைக்கப்படுவதை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டுமென்றும் திரு வெங்கடேசன் வலியுறுத்தினார்.

[]<<<>>>[]

கள்ளச்குறிச்சி, கள்ளச்சாராய சம்பவம் தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தமிழக அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக சி பி ஐ விசாரணை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் பொறுப்பு தலைமை நீதிபதி திரு மகாதேவன் மற்றும் நீதிபதி திரு முகமது சஃபீக் அடங்கிய அமர்வு முன் நேற்று விசாரணைக்கு வந்தது.

இந்த சம்பவம் தொடர்பாக உடனடியாக சி பி சி ஐ டி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டதாகவும், கள்ளச்சாராயத்தை ஒழிக்க அனைத்து நடவடிக்கைகளையும் மாநில அரசு எடுத்து வருவதாகவும் மாநில அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டது.

உரிய முறையில் விசாரணை நடைபெற்று வருவதால் சி பி ஐ விசாரணை தேவையில்லை என அரசு சார்பில் கூறப்பட்டது.

இதையடுத்து வழக்கு விசாரணை வரும் 11-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் ஜிகா வைரஸ் பாதிப்பு ஏற்படாமல் தடுக்க உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மாநில பொது சுகாதாரத்துறை இயக்குநர் திரு செல்வ விநாயகம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துமாறு மாவட்ட நிர்வாகங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

மழை பெய்த பின்னர் சாலைகள், பொது இடங்களில் தண்ணீர் தேங்காமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதகாவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் ஜிகா வைரஸ் பாதிப்பு இல்லை என்றும், பொதுமக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

கொசுக்கள் உற்பத்தியாகாத வகையில் சுற்றப்புறத்தை தூய்மையாக வைத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் திரு செல்வ விநாயகம் கேட்டுக் கொண்டுள்ளார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் ஒரு சில இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்று இரவு பரவலாக காற்றுடன்கூடிய கனமழை பெய்தது.

செங்கல்பட்டு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பரவலாக நேற்று மழை பெய்தது.

கனமழை காரணமாக சென்னை விமான நிலையத்தில் விமானங்களின் சேவை பாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - சுரேகா ) ---37 செகண்ட்*

திருவள்ளூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று இரவு கனமழை பெய்ததாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

*( வாய்ஸ்பைட் - தனசேகர் ) --- 30 செகண்ட்*

இதனிடையே மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் நீர்வரத்து சீராக உள்ளது.

குற்றால அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கான நேரம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - செந்தில் ) ---30 செகண்ட்*

**[]<<<>>>[]**

இருவரி செய்திகள் -

யுக்ரைனுக்கு மேலும் இரண்டு புள்ளி மூன்று பில்லியன் டாலர் மதிப்பிலான ராணுவ உதவிகளை அமெரிக்கா வழங்க முடிவு செய்துள்ளதாக அந்நாட்டு பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு லாயிட் ஆஸ்டின் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

அமெரிக்காவில் வடக்கு கலிஃபோர்னியா பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீயை அடுத்து அப்பகுதியில் இருந்து 13 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

**[]<<<>>>[]**

தேசிய மாணவர் படையினர் லடாக்கின் காங்க் யாட்சே மலைப்பகுதியில் மேற்கொள்ளும் மலையேற்றப் பயணத்தை மத்திய பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் திரு சஞ்சய் சேத் தொடங்கி வைத்தார்.

**[]<<<>>>[]**

தேசிய மருத்துவ ஆணையத்தின் தலைவராக டாக்டர் பி என் கங்காதர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**[]<<<>>>[]**

வரும் 13-ம் தேதி நடைபெறவுள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குரூப்-ஒன் தேர்வுகளுக்கான ஏற்பாடுகள் குறித்து கன்னியாகுமரியில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஆலோனைக் கூடடம் நடைபெற்றது.

[]<<<>>>[]

பட்டாசி தயாரிக்க தடை செய்யப்பட்ட பேரியம் நைட்ரேட் வெடிமருந்து மூலப்பொருட்களை விருதுநகர் மாவட்டம் சாத்தூர் அருகே அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

[]<<<>>>[]

திருப்பத்தூர் மாவட்டத்தில் காவல்துறை தொடர்பான மக்கள் குறைதீர்க்கும் கூட்டம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு ஆல்பர்ட் ஜான் தலைமையில் நேற்று நடைபெற்றது.

[]<<<>>>[]

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 875 நீர்நிலைகளிலிருந்து விவசாயிகள் மற்றும் மண்பாண்ட தொழிலாளர்கள் கட்டணமின்றி வண்டல் மண் எடுத்துச் செல்ல உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கலாம் என ஆட்சியர் திரு லட்சுமிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

[]<<<>>>[]

சென்னை அம்பத்தூர், திருவொற்றியூர் பகுதிகளில் மாநகராட்சி மற்றும் -மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் பிளாஸ்டிக் பைகள் இல்லாத தினத்தையொட்டி விழிப்புணர்வு முகாம் நேற்று நடைபெற்றது.

[]<<<>>>[]

தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்களுக்கு எதிராக சென்னையில் கடந்த ஏழு நாட்களில் நடத்தப்பட்ட சோதனைகளின்போது 30 பேர் கைது செய்யப்பட்டு, 26 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக மாநகர காவல்துறை தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

டுவெண்டி —டுவெண்டி கிரிக்கெட் உலகக்கோப்பையை வென்ற இந்திய அணி இன்று அதிகாலை தில்லி திரும்பியது.

விமான நிலையத்தில் அவர்களுக்கு ரசிகர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

வெஸ்ட் இண்டீஸின் பார்படாஸில் ஏற்பட்ட மோசமான வானிலை காரணமாக இந்திய வீரர்கள் நாடு திரும்புவதில் தாமதம் ஏற்பட்டது,

இந்திய அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள் இன்று பிரதமர் திரு நரேந்திரமோடி சந்திக்கவுள்ளனர்.

பின்னர் மும்பையில் இன்று மாலை நடைபெறும் வெற்றி விழா பேரணியிலும் அவர்கள் பங்கேற்கின்றனர்.